செ.வெ.எண்.95 நாள்.01.03.2018

**<u>காஞ்சிபுரம் ஆற்காடு நாராயணசாமி முதலியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.</u>**

*************

தமிழகமெங்கும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு 01.03.2018 அன்று துவங்கி 06.04.2018 வரை நடைபெறுகிறது. தேர்வு காலை 10.00 மணிக்கு தொடங்கி நண்பகல் 01.15 மணி வரை நடைபெறுகிறது. காஞ்சிபுரம் ஆற்காடு நாராயணசாமி முதலியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வு காஞ்சிபுரம் மாவட்டத்தில் 119 மையங்களில் நடைபெறுகிறது. இதில் 17 மையங்களில் தேர்வு எழுதும் மாணவர்களின் அதிக எண்ணிக்கையை கருத்தில் கொண்டு A-wing மற்றும் B- Wing என்று இரு பிரிவுகளாக தேர்வு மையங்கள் செயல்படும். ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு முதன்மை கண்காணிப்பாளர் மற்றும் ஒரு துறை அலுவலர் வீதம் 136 முதன்மைக் கண்காணிப்பாளரும் 136 துறை அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 12–ம் வகுப்பு பொதுத்தேர்வை 23,309 மாணவர்களும், 25,355 மாணவிகளும், 2,309 தனித்தேர்வர்களும் ஆக மொத்தம் 49,973 பேர் தேர்வு எழுத உள்ளனர். தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் வழங்குவதற்காக 19 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

12ம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு எழுத போதுமான விடைத்தாட்கள் பெற்று முகப்பு தாட்கள் தைக்கப்பட்டு அந்தந்த மையத்தில் பாதுகாப்பாக தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தேர்வு நாட்களில் தேர்வு மையங்களுக்கு வினாத்தாட்களை பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்ல ஆயுதம் தாங்கிய காவலர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி மாணவர்கள் (Scribe) 69 பள்ளிகளில் 145 மாணவர்கள் தேர்வு எழுதவுள்ளார்கள். மாற்றுத்திறனாளிமாணவர்களுக்கு சொல்வதை எழுத 74 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.திருவளர்செல்வி உடன் இருந்தார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.